# பாரதிதாசன் பல்கலை கழகத்தில் 6 புதிய பாடப்பிரிவுகள் துவக்கம்

## துணைவேந்தர் தகவல்

திருச்சி, ஜூலை 26: நடப்பு கல்வியாண்டில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 6 புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளதாக துணைவேந்தர் முத்துக்குமார் தெரிவித்தார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலை கழக செனட் கூட்டம் நேற்று நடந்தது. புதிய செனட் உறுப்பினர்களாக ஐஏஎஸ் அதிகாரி அபூர்வா, அரசு சட்டத் துறை செயலர் (பொ) பூவலிங்கம் உள்பட 40 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

துணைவேந்தர் முத்துக்குமார்பேசியதாவது: கடந்த ஓராண்டில் பெரம்பலூர், கரூர் மாவட்டத்தில் 2 கல்லூரி துவங்கப்பட்டுள்ளது. அகாடமிக் ஸ்டாப் கல்லூரியை, மனிதவள மேம்பாட்டு மையம் என பல்கலைக்கழக நிதிநல்கலைக்குழு பெயர் மாற்றி உள்ளது.

2015-16ம் கல்வியாண்டில், 5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்புகள் எம்ஏ பொருளியல், எம்எஸ்சி நிலத்தியல், 2 ஆண்டு எம்ஏ மேம்பாட்டு படிப்பு, ஓராண்டு உடற்கல்வி இளநிலை படிப்பு (பி.பி.எட்), ஓராண்டு கல்வி நுட்பவியல் எம்.எட், மூன்று வகையான எம்.டெக் படிப்பு என 6 புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக துறைகளில் நடத்தப்படும் முதுநிலைப் பாடப்பிரிவுகளில் 2015-16 கல்வியாண்டு முதல் அதிகபட்சமாக 40 மாணவர்கள் வரை சேர்க்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. 10 வெவ்வேறு நிறுவனங்களுடன் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது. பிரிக்ஸ் நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் தரவரிசை பட்டியலில் 156வது இடத்தை பாரதிதாசன் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது.

பல்கலை நிதிநல்கலைக்குழு சிறப்பு உதவி திட்டம் மூலம் சுற்றுச்சூழல் தொழில்நுட்பத்துறைக்கு ரூ.99 லட்சம், சமூகப் பணியியல்துறைக்கு ரூ.86 லட்சம், புவியியல் துறைக்கு ரூ.1.28 கோடி வழங்கப்பட்டுள்ளது. பல்கலை கருத்துருவை ஏற்று மகளிர் விடுதி கட்ட ரூ.1.20 கோடி, பயிற்சி மையம் அமைக்க உடற்கல்வியியல் துறைக்கு ரூ.2.40 கோடி ஒப்பளிப்பு செய்து, ரூ.1.20 கோடியும் யுஜிசி 12வது திட்டத்தின் கீழ் வழங்கி உள்ளது.

இவ்வாறு துணைவேந்தர் பேசினார்.

## தகவல் 'சொல்லாத' பிஆர்ஓ

பல்கலையில் நடக்கும் நிகழ்ச்சிகள், விழாக்கள் குறித்து பிஆர்ஓ (பொ) கலா பத்திரிக்கை, மீடியாக்களுக்கு முறையாக தகவல் தெரிவிப்பதில்லை. இதனால் பல்கலையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிவதில்லை. நேற்று நடந்த கூட்டத்துக்கு கூட பெரும்பாலான பத்திரிக்கை, மீடியாக்களுக்கு முறையான அழைப்பு விடுக்கவில்லை. தகவல் தெரிவிக்காமல் இருக்க ஒரு பிஆர்ஓ தேவையா என பத்திரிக்கையாளர்கள் கேள்வி எழுப்பினர்.